ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2017.12.29 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - ஒத்தோபர் 2017

### பொதுநோக்கு

வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட தொடர்ச்சியான உட்பாய்ச்சல் என்பனவற்றின் காரணமாக 2017 ஒத்தோபரில் வெளிநாட்டுத்துறை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. தொடர்ந்து நான்காவது மாதமாக இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்த உயர்ந்த ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன ஒத்தோபரில் வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்களவு ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மிதமாக அதிகரித்த வேளையில் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிலைமைகளின் காரணமாக தொழிலாளர் பணவனுப்பல்கள் மேலும் வீழ்ச்சியடைந்தன. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலும் அரச பிணையங்கள் சந்தையிலும் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தமைக்கிடையிலும் இம்மாத காலப்பகுதியில் சென்மதிநிலுவையின் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சென்மதிநிலுவை 2017 ஒத்தோபர் இறுதியில் ஏறத்தாள ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் கொண்ட திரண்ட மிகையைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2017 ஒத்தோபர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு குறிப்பாக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியினால் வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மை ஈர்த்துக்கொள்ளப்பட்டமையே காரணமாகும்.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றச் சுருக்கம் (அ)

| வகை | ஒத்தோபர் 2016 ஐ.அ.டொ. மில். | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன - ஒத் 2019 ஐ.அ.டொ. மில். | சன - ஒத் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 855 | 976 | 14.1 | 8,641 | 9,400 | 8.8 |
| இறக்குமதிகள் | 1,724 (b) | 1,727 | 0.2 | 15,635 (b) | 16,991 | 8.7 |
| வர்த்தக நிலுவை (தேறிய) | -868 (b) | -752 | - | -6,994 (b) | -7,591 | - |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 258 | 262 (c) | 1.3 | 2,846 | 2,924 (c) | 2.7 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 608 | 533 | -12.2 | 5,990 | 5,518 | -7.9 |
| கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | 8 | 13 | 55.0 | -11 | 279 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் | 129 (b) | 319 | 148.2 | 4,411 (b) | 5,046 | |
| திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் | 43 | 142 | 229.4 | 1,204 | 1,403 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறி | - | - | - | 1,500 | 1,500 | |
| நீண்டகால கடன்கள் | 86 (b) | 177 | 107.4 | 1,007 (b) | 1,143 | |
| வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி | - | - | - | 700 | 1,000 | |
| ப.நா.நி - வி.நி.வ. பெறுவனவுகள் | - | - | - | 168 | 167 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | - | - | - | 293 | 711 | |
| முழுமொத்தம் | - | - | - | -274 | 1,991 | |

**மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை.**

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அதன் 2017இற்கான அளவீட்டுப் பெறுபேறுகளை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்


(ஈ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.

### வர்த்தக நிலுவை

2017 ஒத்தோபரில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சுருக்கமடைந்தமைக்கு ஏற்றுமதி வருவாய்களின் ஆரோக்கியமான செயலாற்றமே முக்கிய காரணமாகும். எனினும், ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2017இன் முதல் பத்து மாதகாலப்பகுதியில் மிதமாக விரிவடைந்தது.

வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை





*மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய*

**ஏற்றுமதிச் செயலாற்றம்**

வளர்ச்சி உத்வேகத்தினை பேணுகின்ற விதத்தில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேலும் அதிகரித்து 2017 ஒத்தோபரில் இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவுசெய்தன. இதற்கு கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்கள் முக்கிய காரணமாக அமைந்து ஐக்கிய அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்குமான ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலித்தது. பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் + வசதியின் நன்மைகள் கிடைத்தமையைக் காட்டும் விதத்தில் 2017 ஒத்தோபரில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 14.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள் 8.0 சதவீதத்தினால் அதிகரித்து ஆடைகளுக்கான அதிகரித்த கேள்விகளை பிரதிபலித்தன. காய்கறிகள், பழவர்க்கங்கள், விதைகளின் தயாரிப்புக்கள் என்பனவற்றின் பதிவுசெய்யப்பட்ட ஆரோக்கியமான செயலாற்றத்தின் காரணமாக உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலையிலிருந்தான வருமானங்கள் இம்மாத காலத்தில் அதிகரித்தன. மேலும், இறப்பர் உற்பத்தியிலிருந்தான வருவாய்கள் உயர்வுற்றவைக்கு இறப்பர் டயர்களின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகளும் நீர்க்கல மற்றும் வான் எரிபொருட்களின் விலைகளுமே காரணமாகும். அதேவேளை, 2017 ஒத்தோபரில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. சராசரி தேயிலை ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட 13.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பு மற்றும் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட 11.3 சதவீதம் கொண்ட வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளில் வரவேற்கத்தக்க வளர்ச்சியொன்று காணப்பட்டதுடன் இது வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வருவாய்களுக்கு முக்கியமாகப் பங்களித்தது. கறுவாவின் உயர்ந்த அளவு மற்றும் விலைகளின் காரணமாக வாசனைத் திரவியங்களிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீதான தடைகள் அகற்றப்பட்டமை மற்றும் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் திட்டம் + வசதி மீளக் கிடைத்தமை என்பனவற்றின் சாதகமான தாக்கத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஏற்றுமதிகள் அதிகரித்ததுடன் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 145 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. எனினும், 2017 ஒத்தோபரில் தெங்கு உற்பத்தியிலிருந்தான வருவாய்கள் 2016 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து உள்ளீட்டு உற்பத்திகளினதும் உள்நாட்டு நிரம்பல் குறைவடைந்தமையே காரணமாகும். 2017 ஒத்தோபரில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னணிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, இத்தாலி மற்றும் ஜேர்மனி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாள 51 சதவீதத்திற்கு வகைகூறின.

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




*மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி*

அட்டவணை 2: ஏற்றுமதி வருமானம் (அ)

| வகை | ஒத்தோபர் 2016 (ஆ) ஐ.அ.டொ.மில் | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன - ஒத் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **654.0** | **725.0** | **10.9** | **6,661.4** | **7,031.8** | **5.6** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 391.6 | 422.6 | 7.9 | 4,107.5 | 4,137.6 | 0.7 |
| இதில் ஆடைகள் | 363.5 | 399.7 | 10.0 | 3,877.3 | 3,895.2 | 0.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 68.3 | 78.8 | 15.4 | 644.3 | 693.5 | 7.6 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் | 23.7 | 35.1 | 48.2 | 276.8 | 331.4 | 19.7 |
| புகையிலை | 36.3 | 35.1 | (3.5) | 265.7 | 312.5 | 17.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 27.2 | 34.9 | 28.4 | 231.6 | 327.8 | 41.5 |
| சாதனங்கள் | 25.7 | 25.8 | 0.5 | 236.2 | 214.0 | (9.4) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 10.7 | 11.0 | 2.4 | 140.6 | 131.4 | (6.6) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் | 8.9 | 8.5 | (3.9) | 76.2 | 93.9 | 23.3 |
| ஆபரணங்கள் | 5.2 | 6.3 | 21.0 | 117.2 | 151.0 | 28.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் | 6.5 | 5.8 | (10.3) | 54.5 | 62.2 | 14.2 |
| காலணி | 0.6 | 3.7 | 573.5 | 18.6 | 37.9 | 103.5 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 3.1 | 3.0 | (4.5) | 29.5 | 28.1 | (4.5) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 46.1 | 54.4 | 17.9 | 462.7 | 510.5 | 10.3 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **197.8** | **245.6** | **24.2** | **1,942.3** | **2,323.4** | **19.6** |
| தேயிலை | 108.1 | 136.2 | 26.1 | 1,057.9 | 1,275.9 | 20.6 |
| வாசனைத்திரவியம் | 28.7 | 42.4 | 47.9 | 262.7 | 339.9 | 29.4 |
| தேங்காய் | 33.0 | 30.1 | (8.7) | 308.5 | 303.3 | (1.7) |
| கடலுணவு | 13.3 | 20.2 | 51.5 | 136.3 | 196.3 | 44.0 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 7.9 | 9.4 | 19.9 | 101.8 | 120.4 | 18.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.9 | 2.9 | 52.2 | 26.2 | 29.6 | 13.0 |
| இறப்பர் | 1.9 | 2.5 | 33.4 | 22.7 | 24.6 | 8.6 |
| மரக்கறிகள் | 3.0 | 1.8 | (41.3) | 26.2 | 33.4 | 27.5 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.3** | **4.9** | **48.0** | **37.3** | **44.5** | **19.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **855.0** | **975.6** | **14.1** | **8,641.1** | **9,399.7** | **8.8** |


**மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி.**

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தப்பட்டவை

## இறக்குமதிச் செயலாற்றம்

2017 ஒத்தோபரில் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு சீனியின் குறைந்த விலை அதேபோன்று சீனியின் குறைந்த இறக்குமதி அளவு என்பனவற்றின் விளைவாக சீனி இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். ஒப்பிடுகையில், 2016 ஒத்தோபரின் உயர்ந்த சீனி இறக்குமதிகள் சீனி இறக்குமதிகளின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியில் தாக்கத்தினைக் கொண்டிருந்தன. விலைகளில் அதிகரிப்புக்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




*மூலங்கள்: இலங்கைச் சுங்கம். இலங்கை மத்திய வங்கி*

காணப்பட்டபோதும் மசகெண்ணெயின் இறக்குமதி அளவு குறைவடைந்தமையின் விளைவாக எரிபொருள் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. தொலைத்தொடர்பூட்டல் கருவிகளை முதன்மையாகக் கொண்ட பொறிகள் மற்றும் கருவிகளின் குறைந்த இறக்குமதிகளின் காரணமாக முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. முச்சில்லு வண்டிகள் மற்றும் சரக்கு வண்டிகளின் இறக்குமதியில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. 2017 ஒத்தோபரில் சிமெந்தினை முக்கியமாகக் கொண்ட கட்டடப்பொருட்கள் வீழ்ச்சியடைந்த வேளையில் இறுதியாக்கப்பட்ட மற்றும் மூலப்பொருள் வடிவம் ஆகிய இரண்டிலுமான இரும்பு மற்றும் உருக்கு அதேபோன்று சிமெந்து சூளைக்கற்கள் என்பனவற்றின் இறக்குமதிகள் அதிகரித்தமையின் காரணமாக கட்டவாக்கத் துறையுடன் தொடர்பான இறக்குமதிகள் மீதான செலவினம் மிதமான செயலாற்றத்தினைக் காட்டியது. எனினும், உள்நாட்டுச் சந்தையில் அரிசியின் பற்றாக்குறையினை பூர்த்திசெய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு 2017 சனவரியிலிருந்து உயர்ந்த அதிகரிப்புக்கள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டதுடன் அரிசியின் இறக்குமதி அளவு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017 ஒத்தோபரில் 2433.6 சதவீதத்தினால் அதிகரித்தது. நுகர்வுப் பொருட்களின் கீழான அதிகரித்த ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்ததுடன் ஆடைகள் மற்றும் காலணிகளின் இறக்குமதிகள் முக்கியமாக ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களின் இறக்குமதி வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. 2017 ஒத்தோபர் காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதியில் ஏறத்தாள 59 சதவீதத்திற்கு வகைகூறின.

அட்டவணை 3: இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | ஒத்தோபர் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | ஒத்தோபர் 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - ஒத் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - ஒத் 2017 (ஆ) ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **377.2** | **382.2** | **1.3** | **3,576.8** | **3,661.2** | **2.4** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 159.8 | 148.9 | (6.8) | 1,343.7 | 1,484.6 | 10.5 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.4 | 37.8 | 1,465.9 | 17.8 | 245.9 | 1,278.3 |
| இதில் அரிசி | 1.6 | 36.5 | 2,164.3 | 10.2 | 234.9 | 2,202.1 |
| மரக்கறிகள் | 22.3 | 24.4 | 9.5 | 302.6 | 288.0 | (4.8) |
| பால் உற்பத்திகள் | 20.9 | 23.9 | 14.6 | 196.5 | 250.3 | 27.4 |
| கடலுணவு | 57.3 | 14.2 | (75.1) | 291.9 | 213.7 | (26.8) |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 11.9 | 7.7 | (35.3) | 114.1 | 78.0 | (31.7) |
| பழங்கள் | 9.9 | 6.6 | (33.0) | 82.4 | 67.1 | (18.6) |
| வாசனைத் திரவியம் | 2.8 | 3.1 | 10.3 | 30.5 | 37.5 | 23.0 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 32.3 | 31.1 | (3.7) | 307.9 | 304.2 | (1.2) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 217.4 | 233.3 | 7.3 | 2,233.1 | 2,176.6 | (2.5) |
| ஊர்திகள் | 64.6 | 54.8 | (15.2) | 672.5 | 615.2 | (8.5) |
| தொலைத்தொடர்புக் கருவிகள் | 43.5 | 48.7 | 12.1 | 437.0 | 423.3 | (3.1) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 22.5 | 34.6 | 53.9 | 310.1 | 319.1 | 2.9 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 7.3 | 5.5 | (25.0) | 73.4 | 65.5 | (10.8) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 79.4 | 89.6 | 12.8 | 740.1 | 753.5 | 1.8 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **899.0** | **948.4** | **5.5** | **7,983.6** | **9,169.6** | **14.9** |
| எரிபொருள் | 253.7 | 236.9 | (6.6) | 1,930.9 | 2,688.2 | 39.2 |
| இதில் மசகெண்ணெய் | 75.0 | 41.6 | (44.5) | 479.4 | 512.6 | 6.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 164.2 | 176.1 | 7.3 | 1,327.2 | 1,982.2 | 49.4 |
| நிலக்கரி | 14.6 | 19.2 | 31.5 | 124.3 | 193.4 | 55.6 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்க | 68.7 | 79.5 | 15.7 | 412.4 | 594.3 | 44.1 |
| இதில் தங்கம் | 56.6 | 63.3 | 11.8 | 300.9 | 498.0 | 65.5 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 232.4 | 242.1 | 4.2 | 2,218.7 | 2,240.6 | 1.0 |
| இரசாயன உற்பத்திகள் | 74.4 | 76.7 | 3.1 | 702.6 | 690.0 | (1.8) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 55.0 | 58.4 | 6.3 | 508.1 | 516.1 | 1.6 |
| தாள் மற்றும் தாள் அட்டைகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்கள் | 36.2 | 46.1 | 27.2 | 399.8 | 399.7 | (0.0) |
| அடிப்படை உலோகங்கள் | 37.0 | 43.4 | 17.3 | 326.8 | 462.6 | 41.5 |
| Wheat and maize | 19.2 | 31.1 | 62.4 | 221.7 | 295.7 | 33.4 |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 30.0 | 24.3 | (19.1) | 241.6 | 240.6 | (0.4) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 21.6 | 22.8 | 5.4 | 190.9 | 245.8 | 28.7 |
| வளமாக்கி | 5.4 | 10.6 | 95.7 | 111.7 | 81.8 | (26.8) |
| ஏனையவை | 65.3 | 76.4 | 17.1 | 718.3 | 714.3 | (0.6) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **446.0** | **392.5** | **(12.0)** | **4,063.1** | **4,016.2** | **(1.2)** |
| பொறி மற்றும் கருவிகள் | 235.6 | 205.6 | (12.7) | 2,245.7 | 2,147.4 | (4.4) |
| கட்டடப் பொருட்கள் | 134.1 | 125.2 | (6.7) | 1,271.1 | 1,302.9 | 2.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 75.9 | 61.2 | (19.4) | 541.3 | 559.0 | 3.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.5 | 0.5 | 16.0 | 5.0 | 6.8 | 36.8 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.3** | **4.1** | **202.5** | **11.1** | **143.9** | **1,193.6** |
| **மொத்த இறக்குமதி** | **1,723.5** | **1,727.2** | **0.2** | **15,634.7** | **16,990.9** | **8.7** |


(அ) தங்காலிகமானவை

*மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. இலங்கை மத்திய வங்கி*

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**


2017 ஒத்தோபரில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்புக்களை பதிவுசெய்த வேளையில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் சிறிதளவால் அதிகரித்தன. சுற்றுலா வருகைகளின் முதல் ஐந்து மூலங்களான இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பனவற்றிலிருந்தான வருகைகள் 2017 ஒத்தோபர் இறுதியில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் 52.4 சதவீதத்திற்கு வகைகூறின. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2017 முதல் பத்து மாத காலப்பகுதியில் சுற்றுலா வருகைகளும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் 2016இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. அதேவேளை, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிலைமைகளின் விளைவாக 2017 ஒத்தோபரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் 12.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. இதன்படி, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017 ஒத்தோபர் இறுதிவரையான இவ்வாண்டுப் பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 7.9 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 4: சுற்றுலா வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




*மூலம்: இ.சு.அ. அதிகாரசபை*

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




*மூலங்கள்: இ.சு.அ.அதிகார சபை, வர்த்தக வங்கிகள், இமவ*

**நிதியியல் பாய்ச்சல்**

2017 ஒத்தோபர் மாதத்தில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு தொடர்ந்தும் வலுவடைந்தது. சாதகமான முதலீட்டாளர்கள் மனோபாவத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017 ஒத்தோபரிலும் முதல் பத்துமாத காலப்பகுதியிலும் 2016 தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை கணிசமான தேறிய உட்பாய்ச்சலை (இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தை வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சல்கள் இரண்டும் உட்பட) காட்டின. அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் எட்டாவது மாதமாக தேறிய உட்பாய்ச்சலைக் காட்டின. அதேவேளை, இவ்வாண்டின் முதல் பத்து மாத காலப்பகுதியில் அரசுக்கான நீண்டகாலக் கடன்கள் அதிகரித்தன.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2017 ஒத்தோபர் இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2016 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ.6.0 பில்லியனிலிருந்து ஐ.அ.டொ. 7.5 பில்லியனுக்கு அதிகரித்து 4.4 மாத இறக்குமதி

களுக்கு நிதியிட போதுமானதாக இருந்தது. 2017 ஒத்தோபர் இறுதியிலுள்ளவாறு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் நிலைமையில் ஏற்பட்டட அதிகரிப்பிற்கு இம்மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி ஈர்த்துகொள்ளப்பட்டமையும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகளுமே முக்கிய காரணங்களாகும்.

அதேவேளை, வங்கித் தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொ. 9.8 பில்லியனாக அமைந்து, 5.7 மாத இறக்குமதிகளுக்கு போதுமானவையாக காணப்பட்டன.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**





*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**செலாவணி வீத அசைவுகள்**

2017 திசெம்பர் 28 ஆம் நாள் வரையான இவ்வாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா 2016ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலருக்கெதிராக 1.9 சதவீதம் கொண்ட மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபாவானது முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது.

**வரைபடம் 7: வெளிநாட்டுச் செலாவணி நகர்வுகள் ஐ.அ.டொலருக்கு ரூபா**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**அட்டவணை 4: ஏனைய நாணயங்களுக்கு எதிரான இலங்கை ரூபா நகர்வுகள்**

| நாணயம் | 2017 திசெம்பர் 28 வரை உயர்வு(+) / தேய்வு(-) |
|---|---|
| ஐ.அ. டொலர் | -1.9% |
| யூரோ | -12.9% |
| ஸ்ரேலிங் பவுன் | -9.9% |
| ஜப்பான் யென் | -4.6% |
| கனடா டொலர் | -7.7% |
| அவுத்திரேலியா டொலர் | -8.3% |
| இந்தியா ரூபா | -7.5% |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*